## செய்யூர் சட்டமன்றத் தொகுதியில்

# 5 துணை சுகாதார நிலையங்கள் புதுப்பித்துக் கட்டித்தரப்பட்டுள்ளது!

### சட்டப்பேரவையில் கேள்வி – பதிலில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.17-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, செய்யூர் சட்டமன்ற தொகுதியில் 5 துணை சுகாதார நிலையங்கள் புதுப்பித்து கட்டித் தரப்பட்டுள்ளது மற்றும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோ யாளிகள் பிரிவிற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டித் தரப் பட்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.10.2025) சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் கேள்விக்கு செங்கல்பட்டு மாவட்டம், நுகும்பல் கிராம மக்கள் தொகையைப் பொறுத்தவரை 5028 ஆகும். இங்கு ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த துணை சுகாதார நிலையம் பொலம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்கி வருகிறது. நுகும்பல் கிராமம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே சூனாம்பேடு, பெரிய கயப்பாக்கம், பொலம்பாக்கம் மற்றும் இடைக்கழிநாடு ஆகிய நான்கு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

எனவே மக்கள் தொகையின் அடிப்படையிலும் அரசு விதிகளின்படியும், செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம் நுகும்பல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தங்களின் வாயிலாக உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சொல்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் கேட்டது சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நுகும்பல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைய வேண்டும் என்பது, அந்த கிராமத்தில் மக்கள் 5028 மட்டுமே, அது சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததுதான். அந்த ஒன்றியத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகிறது.

சூனாம்பேடு, பெரிய கயப்பாக்கம், பொலம்பாக்கம், இடைக்கழிநாடு என்கின்ற நான்கு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகிறது. இது மக்கள் தொகையின் அடிப்படையிலும் அரசு விதிமுறைகளின்படியும்தான் இந்த துணை சுகாதார நிலையங்கள் இங்கே இயங்கி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்ற தற்குபிறகு அது துணை சுகாதார நிலையம் அமைந்திருக்கிற பகுதியாக இருந்தாலும் அல்லது துணை சுகாதார நிலையம் அமைந்திருக்கிற பகுதியாக இருந்தாலும், மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற மகத்தான திட்டத்தின் மூலம் அந்த ஊரில் மட்டுமே இதுவரை நீரிழிவு நோயாளிகள் 338 பேர், இரத்த அழுத்த நோயாளிகள் 703 பேர், சர்க்கரை மற்றும் இரத்த அழுத்த நோயாளிகள் 269 பேர், இயன்முறை மருத்துவ சிகிச்சை பயனாளிகள் 129 பேர், Palliative சிகிச்சை 5 பேர், காசநோய் பயனாளிகள் 3 பேர், தாய் சேய் நலப் பணிகள் முறையே கர்ப்பகால முன் கவனிப்பு பயனாளிகள் 24 பேர், பின் கவனிப்பு பயனாளிகள் 6 பேர் என்று அந்த ஊரிலே இருப்பவர்கள் யார் யாருக்கு எந்த மாதிரியான நோய் பாதிப்புகள் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அரசு சிகிச்சை அறித்து வருகிறது.

எனவே தமிழ்நாட்டில் இருக்கிற 8713 துணை சுகாதார நிலையங்களையும், ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றிட வேண்டும் என்பது மன்ற உறுப்பினர்களின் விருப்பம், ஆனால் விதிமுறைகள் அதற்கு இடம் தராது என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மன்ற உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யூர் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, ஒப்பளிக்கப்பட்ட மருத்துவப் பணியிடங்கள் 6, அந்த 6 பணியிடங்கள் இருக்கிறது என்று மன்ற உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார். இருந்தாலும் அந்த மருத்துவமனைக்கு தேவையான கூடுதல் வசதிகள் அல்லது அந்த மருத்துவமனைக்கு தேவையான ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் காலியிருப்பின் அதை உடனடியாக நிறைவேற்றித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சாந்திருக்கிற செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் இந்த அரசு பொறுப்பேற்ற தற்கு பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடுக்கலூர், சாலூர், அணைக்கட்டு, விட்லாபுரம் மற்றும் கடுகுப்பட்டு ஆகிய இடங்களில் இருக்கிற ஐந்து துணை சுகாதார நிலையங்கள் புதுப்பித்து கட்டித் தரப்பட்டுள்ளது.

சூணாம்பேடு, பவுஞ்சூர் மற்றும் வல்லிபுரம் ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவிற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டிருக்கிறது.

இடைகாஞ்சிநாடு ஆரம்ப சுகாதார நிலை யத்தில் ஆயுஷ் நலவாழ்வு மையம் அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. தற்போதும் கூட, அவர் சார்ந்திருக்கிற செய்யூர் சட்டமன்ற தொகுதியில் ஜமீன் எண்டத்தூர், சூனாம்பேடு, இடைக்கழிநாடு, முதலியார்குப்பம், வையாவூர் ஆகிய இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இண்டலூர் பகுதியைப் பொறுத்தவரை ஒரு துணை சுகாதார நிலையம் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்படவிருக்கிறது. இடைக்கழிநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு Dental Xray கருவியும் விரைவில் அமைக்கப்படவிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் உரையாற்றினார்.

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில்

# நீலகிரி மாவட்ட தி.மு.க. பாகநிலை முகவர்கள் கூட்டம்!

### பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி முன்னிலை!

நீலகிரி, அக். 17 -

நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், உதகை, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில் நடைபெற்றது, மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்றார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திமுக சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் தண்டபானி கலந்துகொண்டு எதிர்வரும் 2026 தேர்தல் பணிகளில் பாக நிலை முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, ராஜா, சுஜேஷ், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, லியாகத் அலி, வீரபத்திரன், பில்லன், செல்வம்,

மோகன்குமார், உதயதேவன், ராஜேந்திரன், அமிர்தலிங்கம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், சிவசுப்ர மணியம், ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, வெங்கடேஷ், செந்தில்நாதன், அன்வர்அப்துல்லா, சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், தமிழக நிருபர்கள் சங்கம் சார்பில் ஒகேனக்கல்லில் பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம் அமைத்து தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி 40 ஆண்டுகளுக்கு மேல் பத்திரிகை துறையில் பணியாற்றி வரும் மூத்த பத்திரிகையாளர்கள் முரசொலி மணி, கலைஞர் வேணுகோபால், ஸ்ரீனிவாசன், திருமலைவாசன் ஆகியோருக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. நிகழ்வில் டி.எஸ்.பி.பாலகிருஷ்ணன், தமிழக நிருபர்கள் சங்கத்தின் இராசசேகரன், சிவக்குமார், நரசிம்மகுமார், செந்தில்குமார், சேட்டுமாதையன், நவீன் ஜார்ஜ், இர்ஃபான்,தர்மராஜன், ஜீவானந்தம், தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், முருகேசன், மற்றும் 100 க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.



99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஏற்பாட்டில் , எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டில் பணிபுரியும் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் 300 மாநகராட்சி பணியாளர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கப்பட்டது. உடன் 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே சிவகுமார், துப்புரவு மேற்பார்வையாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் டி.தினகரன், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர் கே. சுரேஷ், மின்துறை பொறியாளர் கே. கந்தன், சுகாதார ஆய்வாளர் கே. கவியரசன், வரிவசூலர் சி. சந்திரசேகர் உடன் இருந்தனர்.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# 2394 புதிய நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன!

### சட்டப் பேரவையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



சென்னை, அக்.17 -

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது காங்கிரஸ் உறுப்பினர் ரூபி மனோகரன் கேள்விக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலளிக்கும் போது “முதல்வர் மு.க. ஸ்டாலினின் ‘திராவிடமாடல்’ ஆட்சியில் 2394 புதிய நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன” என்று கூறினார்.

**ரூபி மனோகரன்:** நாங்குநேரி தொகுதி, உன்னங்குளம் ஊராட்சி, குசவன்குளத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் :** நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, உன்னங்குளம் ஊராட்சியில் உள்ள குசவன்குளத்தில் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், ஸ்ரீராமானுஜம் கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் உள்ள உன்னங்குளம் முழுநேர நியாய விலைக் கடையானது 551 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில், புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை கோரும் குசவன்குளம் பகுதியைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

மேலும், உன்னங்குளம் முழுநேர நியாய விலைக் கடைக்கும் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை கோரும் குசவன் குளம் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. ஆகும்.

எனவே, அரசு நிபந்தனைகளின்படி கிராமப் பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், அங்காடி பிரிக்க ப்பட்ட பின் தாய்க் கடையில்குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகவில்லை. எனவே, குசவன்குளம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

நியாய விலைக்கடைகளை புதிதாக உருவாக்க

நகரப் பகுதி 800 குடும்ப அட்டைகள்

கிராமப் பகுதி 500 குடும்ப அட்டைகள்

மலைப்பகுதி 400 குடும்ப அட்டைகள்

இருக்க வேண்டும் ஏறத்தாழ 2394 புதிய நியாய விலைக்கடைகள் இந்த ஆட்சியில் தொடங்கப்பட்டுள்ளன.

அவற்றில் 1605 பகுதி நேர , 789 முழு நேர நியாய விலைக்கடைகள் உள்ளன.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

## பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி

# பாகமுகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்! ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

### வீ.ஜெகதீசன் - பா.துரைசாமி - தங்க.சித்தார்த் - ஏ.கே.அருண் - குன்னம் சி.இராஜேந்திரன் பங்கேற்பு!

பெரம்பலூர்,அக்,17

பெரம்பலூர்,குன்னம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. 2026 சட்டமன்ற தேர்தலில் பணியாற்றும் வகையில், 10 வாக்குச்சாவடிகளை கண்காணிக்கும் நிர்வாகிகள் கமிட்டி அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்று கூறி அதற்கான ஆலோசனைகள் வழங்கினார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, தொகுதி பார்வையாளர்கள் தங்க. சித்தார்த், ஏ.கே.அருண், குன்னம்சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், ராமச்சந்திரன், ஆர்.முருகேசன், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன்,

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர்.கவியரசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எஸ். ஜாகிர்உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்!



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் திரிசூலம் ஊராட்சியில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு கட்டுமான தொழிலாளர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டைகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி (எ) விவேகானந்தன், பகுதி கழக செயலாளர் த.ஜெயகுமார், திரிசூலம் ஊராட்சி மன்ற தலைவர் உஷா மாரிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்..

## விபத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும்

# கோணலூர் முன்னாள் கிளைச் செயலாளர் தங்கமணிக்கு நிதியுதவி!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திண்டிவனம், அக். 17-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் கோணலூர்முன்னாள் கிளைகழகச் செயலாளராக பணியாற்றியவர் தங்கமணி. இவர் சாலை விபத்தில் படுகாயம் அடைந்து மருத்துவமனையில்சிகிச்சை பெற்று தற்போது வீட்டில் உள்ளார்.

இதுகுறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தங்கமணியின் வீட்டிற்கு நேரில் சென்று தங்கமணியை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து நலம் விசாரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூபாய் 10.000 நிதி உதவி வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

நிர்வாகிகள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செஞ்சி சிவா, சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

அக்டோபர் 17 (1993)



‘தஞ்சை மாவட்ட பெரியார்’ என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது “பெரியார் விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**